**Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.**

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .121/2019** | | |
| **PW/DW/CW** | : | **PW1** | | |
| **Name** | : பொன்மலர் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : **மன்மதன்** | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused present)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of**15.04.2024**

---

**முதல் விசாரணை:**

நான் உசிலம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி 2 மாலதி எனது சகோதரி மற்ற சாட்சிகளை எனக்கு தெரியாது. கடந்த 2017 ம் ஆண்டு விபத்து நடந்தது. அன்று மதியம் 1 - 2.00 மணியளவில் நானும் எனது சகோதரி மாலதியும் உசிலம்பட்டி - மதுரை ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நடந்து சென்றபோது பின்னால் இருந்து வந்த வாகனம் ஒன்று என்மீது மோதிவிட்டது. அதில் எனக்கு தலை மற்றும் நெஞ்சில் காயம் ஏற்பட்டது. அதன்பிறகு நான் மயக்கமாகிவிட்டேன். மறுநாள் காலை எனக்கு மயக்கம் தெளிந்தது. என்மீது மோதிய வண்டி ஓட்டுநரான உதயகுமாரின் மனைவி அதே விபத்தில் இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் மூன்று நாட்கள் உள்நோயாளியாகவும் அதன்பின்பு ஒரு மாதம் வெளிநோயாளியாகவும் சிகிச்சை பெற்றேன். விபத்து நடந்த அன்று இரவு எனது கணவர் புகார் கொடுத்துள்ளார். அதன்பின்பு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலத்தில் எனது கணவர் அறிவேன் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார். (அந்த புகார் மனு அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

நானும் எனது சகோதரியும் கிழக்கிலிருந்து மேற்கே பார்த்தவாறு தான் நடந்து சென்றோம் என்றால் சரிதான். எனது அக்கா முன்னாலும் நான் அவருக்கு பின்னாலும் நடந்து சென்றேன். என் மீது வாகனம் மோதியது தான்

தெரியும் எப்படி எவ்வாறு மோதியது என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் எனது புகாரில் எதிரி வாகனத்தின் மீது காசி என்ற ஓட்டுநர் அரசு பேருந்தை ஓட்டி வந்து எதிரி உதயகுமார் இருசக்கர வாகனத்தில் மோதியதால் அவர் எங்கள் மீது மோதியதில் எனக்கு காயம் ஏற்பட்டதாகவும். அரசு பேருந்து ஓட்டுநர் காசி மீது புகார் கொடுத்து குற்றஎண் 960/2017 பிரிவுகள் 279, 337 ன்படி மேற்படி காசி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இழப்பீடு கேட்டு நான் எந்த வழக்கும் போடவில்லை. விபத்து தார் ரோட்டில் நடந்தது ஆனால் நான் சாலை ஒட்டிய மண்ரோட்டில் நடந்து போனேன். போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. S.d./Ponmalar

Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,Usilampatti.